# சித்தர் பாடல்களில் நிலையாமை தத்துவங்கள்.

**தீபிகா.ஆ[1] & முனைவர். பிரியதர்சினி. ச [2]**

**[1]முனைவர்பட்ட ஆய்வாளர், [2]இணைப்பேராசிரியர்**

**தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**

**கோயம்புத்தூர். 641043.**

43

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரை தமிழ் இலக்கியங்களில் சித்தர்களின் நிலையாமைத் தத்துவங்களை எடுத்தியமபுகின்றது.கடுவெளிச் சித்தர் , குதம்ழபச் சித்தர் , பாம்பாட்டிச் சித்தர் , முதலிய சித்தர் பாட்களில் நிலையாமைத் த்ததுவம் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்று இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.இளமை நிலையாமை , யாக்ககை நிலையாமை , செல்வம் நிலையாமை , ஆகிய நிலைமைத் தத்துவங்களை சித்தர் பாட்ல்கள் எவ்வாறு பதிவுசெய்கின்றன என்று இக்கட்டுரை எடுத்தரைக்கின்றது.

**முன்னுரை**

இந்திய மரபில் இலக்கியங்களும் தத்துவங்களும் ஒரே ஊடகமாக இணைந்து மக்களை நெறிபடுத்தி வந்துள்ளன.வளமையான தத்துவங்களும் சிந்தனை மரபுகளும் இந்தியாவிலேயே தோற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ளன.அவ்வகைளில் தமிழகத்தில் சித்தர் தத்துவங்கள் தனிச் சிறப்பிடம் பெற்றுள்ளன.சித்தர் தத்துவங்களைப் மக்களிடையே பரப்புவதற்கு இலக்கியங்களே சிறந்த ஊடகங்களாக அமைகின்றன.சித்தர் பாடல்களே சித்தர் தத்துவங்களின் அடிப்படை வடிவங்களாகத் திகழ்ந்தன.தமிழகத்தில் சித்தர்கள் பற்றிக் குறிப்பிடும் போது பதிணென் சித்தர்கள் என்றே குறிக்கப்படுகின்றனர்.மனித வாழ்வில் ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனை அடைவதே நிலைப்பேற்றினைத் தரும். எஞ்சிய யாவும் நிலையில்லாதவை என்று தங்கள் பாடல்களில் சித்தர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.அவ்வகையில் சித்தர் பாடல்களில் இடம்பெற்றிருக்கும் நிலையாமை குறித்த கருத்துக்களை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** இளமை நிலையாமை , யாக்கை நிலையாமை , செல்வ நிலையாமை , இறைமை.

**நிலையாமைத் தத்துவம்**

உலகில் தோன்றிய உயிர்கள் யாவும் ஒரு நாள் மறைந்து போகும் என்பதே இயற்கை நெறியாகும்.உயிர்களின் படிநிலை வளர்ச்சியில் தோற்றமும் மறைவும் தவிர்க்க முடியாதவையாகின்றன.இதனால் இளமை , அழகு , யாக்கை , செல்வம் ஆகியவை அழியும் தன்மையுடையன என்று சித்தர்கள் தங்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.நிலையாமை கருத்துக்கள் தொல்காப்பியர் காலந் தொட்டே வழக்கில் இருந்து வருகின்றனர்.

**பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்றானு**

**நில்லா வுலகம் புல்லிய நெறித்தே** (தொல்.பொருள்.நூற்.78)

என்னும் தொல்காப்பிய நூற்பாக்கள் நிலையாமைக் கருத்தை வெளிப்படுத்துகின்றன.நிலையில்லாத வாழ்க்கையின் தன்மையை

**அறித்து அதன்வழி வாழ்வதே நல்வாழ்வாகும்.**

**நில்லாத வற்றை நிலையீன என்றுணரும்**

**புல்லறி வாண்மை கடை (குறள் -331).**

நிலையில்லாதவற்றை நிலையானவை என்று மயங்கி வாழ்பவர்கள் புல்லறிவாளர்கள் என்று வள்ளுவர் குறட்பாவின் வழி கடிந்துரைக்கிறார்.

**யாக்கை நிலையாமை**

மனித உடலானது ஆசைகளின் உறைவிடமாகவும் , சிற்றின்பம் துய்த்து விரைவில் அழியும் உடலின் இச்சைகளுக்கு இடம் கொடாது உள்ளத்துள் இறைவனைத் துதிக்க வேண்டும் என்று சித்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

**நீர்மேற் குமிழியிக் காயம் இது**

**நில்லாது போய்விடும் நீயறிமாயம்.(கடு.சித்.பா.4)**

என்னும் கடுவெளிச் சித்தர் பாடலில் உடலை நீரில் தோன்றும் குமிழிக்கு ஒப்பாகக் காட்டுகின்றார்.பதினெண் சித்தர்களுள் முதன்மையானவராகவும் காலத்தால் முற்பட்டவராகவும் கருதப்படும் திருமூலர் நிலையாமை தத்துவத்தை முதல் தந்திரத்திலேயே பாடியுள்ளார்.

**பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்**
**உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செல்லார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநடவாதே (திருமந்திரம்-188)**

என்னும் பாடலின் வழி கூரைபோல விழும் உடலில் இருந்து வெளிப்படும் ஆவியோடு , ஐம்பொறிகளைக் கொண்டியங்கிய உடலும் அவ்வுடலால் பிறந்தவர்களும்,அவ்வுடலை

மணந்தவர்களும் துணையாக வரமாட்டார்கள்.மாறாக அவ்வுடலால் செய்யப்பட்ட நன்னெறிகளே துணையாக வருமென்று யாக்கை நிலையாமை குறித்து வலியுறுத்துகிறார்.

**ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு**
**பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு**
**சூறையங்காட்டினில் கொண்டு போய் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே. (திருமந்திரம்.ப-189)**

என்னும் பாடலில் உடலைவிட்டு உயிர் நீங்கிய பின் உயிருடன் இருந்தபோது அவ்வுடலுக்கு இட்ட பெயர் கூட நிலைக்காமல் பிணம் என்றே அழைக்கப்படும்.நாட்கள் செல்ல செல்ல அம்மனிதனின் நினைவுகள் கூட மக்களின் மனதில் மறைந்துபோகும் , அத்தகைய இழிநிலையைக் கொண்ட உடலின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சித்தோமேயானால் இறுதியில் துயரம் மட்டுமே எஞ்சியிருக்கும் , மாறாக படைப்பின் பரம்பொருளை எண்ணி உலகப் பற்றுகளைக் கைவிட்டு தியானித்தோமேயானால் மேன்மையுறலாம் என்று வழிகாட்டுகிறார்.

**செல்வம் நிலையாமை**

திருமந்திரத்தில் செல்வத்தின் நி்யாமை குறித்து பின்வருமாறு திருமூலர் குறிப்பிடுகிறார்.

**இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்குந்**
**துயக்குறு செல்வத்தை சொல்லவும் வேண்டா.(திருமந்திரம்-213)**

உலக வாழ்வில் நல்வழிக்குப் பயன்படுத்தாமல் சேர்த்து வைத்த செல்வம் மறுமை வாழக்கைக்கு கொண்டு செல்ல பயன்படாது.நல்வழியால் பயன்படுத்தப்பட்ட செல்வத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகளே மறுமை வாழ்விற்கு வழிகாட்டும் என்கிறார்.

**ஈட்டிய தேன்பூ மணங் கண்டிரதமும்**
**கூட்டி கொணர்நதொரு கொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துரத்திட்டது வழியார்கொளக்**
**காட்டிக் கொடத்தது கைவிட்ட வாறே.(திருமந்திரம்ப-215).**

மணம் வாய்ந்த பூக்களைத் தேடி அவற்றிலிருந்து தேன{க்கள் தேனைச் சேர்த்துத் தமது வீட்டில் வைக்கும். அத்தேனைப் பல சூழ்ச்சிகள் செய்து மனிதன் அதைக் கைப்பற்றுகிறான். அதுபோல மனிதன் அரும்பாடுபட்டச் செல்வத்தைச் சேர்த்தாலும் அவன் உயிரோடு இருக்கும்போதே அது பிறரால் கவரப்படுகிறது என செல்வத்தின் நிலையாமைத் தன்மையைக் குறி;த்து எடுத்துரைக்கிறார்.

குதம்பைச் சித்தரும் தன் பாடல்களில் பொருட்செல்வத்தைவிட அருட்செல்வமே சிறந்தது ஆகும். அதனை அறியாமல் மக்கள் அரும்பாடுபட்டு செல்வத்தைச் சேர்க்கின்றனர் என்று

குறிப்பிடுகின்றார்.

**தேடிய செம்பொன்னும் செத்தபோது உன்னோடு**

**நாடி வருவதுண்டோ**
**போம்போது தேடும் பொருளில் அணுவேனும்**

**சாம்போது தான் வருமா.(குதம்பைச் சித்தர்-102)**

அறிதில் தேடி கண்டடைந்த யாவும் இறப்பில் எப்போதும் துணைவருவதில்லை என்று கூறுகிறார்.இவரை அடியொற்றியே பாம்பாட்டிச் சித்தரும்

**மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப்பவர்**

**மறலிதான் வருகையில் வாரிச் செல்லீரோ (பாம்பாட்டிச் சித்தர் ப-44)**

மலைகுன்று போல நாம் பொற்குவியல் வைத்திருந்தாலும் அதனை மறுபிறவிக்கு கொண்டு செல்ல முடியாது என்று எடுத்துரைக்கின்றார்.எனவே தற்காலச் சூழலில் செலவம் வாழ்கையை நகர்த்துவதற்கு ஒரு தேவைப்படுகிறது , இருப்பினும் செல்வம் சேர்ப்பது மட்டுமே வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ளாமல் நல் மனிதர்களையும் சேர்ப்பதில் நாம் நாட்டம் கொண்டவர்களாக வாழ முற்பட வேண்டும் என்பதே சித்தர் பாடல்களின் மூலம் அறிவுறுத்துவதாகும்.

**இளமை நிலையாமை**

மனிதனின் வாழ்க்கை பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கொண்டது.குழந்தைப் பருவம் , பதின்பருவம் , இளம்பருவம் , முதுமை என்பவை மனிதன் வயதாலும் உடலாலும் அடையும் வளர்ச்சிநிலைகள் ஆகும்.காலச் சூழற்சியே மனிதனை ஒவ்வொரு பருவத்திற்கும் நகர்த்திச் செல்கிறது.மனிதன் இவ்வனைத்து நிலைகளையும் கடந்தே வாழ வேண்டும் என்பது இயற்கையாகும்.வாழ்நாள் முழுவதும் இளமையுடன் வாழும் பேறு மனிதர்களுக்கில்லை.எனவே திங்கள் தேய்வதைப் போல் உடலின் வனப்புகளும் தேய்ந்து ஒரு நாள் அனைவரும் முதுமை எய்துவோம் என்று உணர வேண்டும்.நிலையில்லா இளைமையை பேண நாம் அரும்பாடு பட்டாலும் முதுமையை எள்ளாமல் இகழாமல் எற்றுக் கொள்ள வேண்டு;ம் என்று சித்தர் பாடல்கள் வழி அறிய அறியலாம்.

**கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே**
**விழக்கெண்டுந் தேறார் விழியிலா மாந்தர்**

**குழக்கன்று முத்தெரு தாய்ச்சில நாளில்**

**விழக்கண்டுந் தேறார் வியனுலகோரே (திருமந்.பா.221)**

என்னும் பாடலடிகளில் கிழக்கில் தோன்றும் சூரியன் மேற்கில் மறைவது போல இளமையும் நில்லாமல் முதிர்ச்சிபெறும் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.அவ்வழியே குதம்பைச் சித்தரும்

**பிறக்கும் போது உள்ள பெருமையைப் போலவே**

**இறக்கும் போது எய்துவிடும் குதம்பாய் . (குதம்.சித்.பா.82)**

என்று பாடியுள்ளார்.புறத்தழகு தற்காலத்தில் சிறப்பிடம் பெற்று வரும் நிலையில் அகத்தழகையும் நாம் மேம்படுடுத்திக் கொள்ள வேண்டும் என்று சித்தர் பாடல்கள் நினைவூட்டுகின்றன.

**முடிவுரை**

நிலையாமைத் தத்தவங்கள் தொல்காப்பியம் தொடங்கி நீதி நூல்கள் , காப்பியங்கள் , என்று பல்வேறு காலச் சூழல்களில் தமிழிலக்கிய பதிவுகளின் அறியலாம்.சித்தர் பாடல்களில் இடம்பெற்றுள்ள நிலையாமைத் தத்துவங்கள் எளிய மக்களுக்கும் புரியும் வண்ணம் உள்ளது.இளமை , யாக்கை , செல்வம் , என்று எவையும் நிலையில்லாதகும் அடுத்த நொடி நிச்சயமற்ற மனித வாழ்வில் நிலையாக நாம் போற்ற வேண்டியது அன்பும் இறைமையும் தான் என்பதை எடுத்துரைக்கின்றது..பிறரிடம் செல்வம் , இளமை போன்றவற்றை எதிர்பார்ப்பதைத் தவிர்த்து எதிர்பார்ப்புகளற்ற நிபந்தனையற்ற அன்பு செலுத்துவதே நிலையாமைத் தத்துவங்களின் அடிநாதமாகும்;.

**துணைநின்றவை.**

1.தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், பேராசிரியர்.திருஞானசம்பந்தம், கதிர் பதிப்பகம்.சென்னை.

2.மணிமேகலை மூலமும் உரையும், உரையாசிரியர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை துரைசாமிப் பிள்ளை சாரதா பதிப்பகம்,சென்னை.

3.திருக்குறள் மூலமும் உரையும், நர்மதா வெளியீடு, சென்னை.

4.சித்தர் பாடல்கள் மூலமும் உரையும் உரையாசிரியர், இளமுனைவர் தமிழ்ப்பிரியன்,கற்பகம் புத்தகாலயம்.சென்னை.